## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.78/2024** **L.W.2** **P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பிரகாஷ் | Father / Husband Name | கரும்பாயிரம் |
| Village | ஆவினங்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 45 |
| | | Time | 12.25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 25.07.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் ஆவினங்குடியில் வசித்து விவசாய வேலைசெய்து வருகிறேன். அசா.1 விமலா எனது மனைவி. எனக்கு பட்டியல் சாட்சிகள் 3 முதல் 9 வரையுள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரிதான் என்னுடைய வீட்டில் செல்லை திருடிச்சென்றவர் என்று சாட்சி ஆஜர் எதிரியை பார்த்து அடையாளம் காட்டினார். சென்ற ஆண்டு மே மாதம் 24 ம் தேதி இரவு 1.00 மணியிலிருந்து 1.30 மணிக்குள் ஆஜர் எதிரி எங்கள் வீட்டு கதவு காற்றோட்டத்திற்காக திறந்திருந்தது, நானும் எனது அம்மாவும்வெளியில் படுத்திருந்தோம், எனது மனைவி, எனது குழந்தைகளும் வீட்டிற்க்குள் படித்திருந்தார்கள், என்னுடைய மகள் ரெட்மி மொபைலைபேசி முடித்துவிட்டு டி.விக்கு மேலே வைத்துவிட்டு தூங்கிவிட்டார். அப்போது ஆஜர் எதிரி மேற்ச்சொன்ன நேரத்தில் இவருபாட்டுக்கு வந்து செல்போனை எடுத்துக்கிட்டு எனது மனைவியின் போட்டிருந்த ஜெயினை இவருகையை வைக்கும்போது எனது மனைவி முழுச்சிவிட்டு உடனே ஆஜர் எதிரியை பிடித்துவிட்டார் உடனே ஆஜர்எதிரி என் மனைவியை திமிரிவிட்டுவெளியே ஓடிவிட்டார். என் மனைவி சத்தம் போட்டவுடன் நான் இவரை துரத்திக்கொண்டுஓடினேன். இவர்தான் என அடையாளம் தெரிந்துகொண்டு ஓடியபோது இவர் போய் மறைந்துவிட்டார். பிறகு இது சம்மந்தமாக மறுநாள் காலை 25 ம் தேதி காலை 7.00 மணிக்கு என் மனைவி புகார்கொடுத்தார். போலிஸார் அன்று காலை 8.00 மணியிலிருந்து 8.30மணிக்குமேல் வீட்டில் வந்து விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார் கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு**

**தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

**1.**மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியல் போலிஸார் தன்னைவந்து வீட்டில் விசாரித்தபோது விசாரணையில் நானும் என் மனைவியும் எங்கள்ஊர் மாரியமம்மன் கோவில்வரை சென்றுதேடிப்பார்த்துக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது பட்டியல்சாட்சி 3 ராஜேந்திரன் மனைவி விருதாம்பாள் வந்து தேடினார் என்றும் அவர் எங்களை பார்த்து ஏன்இந்த நேரத்தில் இங்குநிற்கிறீர்கள் என்ற கேட்டதாகவும்அதற்கு நானும் என் மனைவியும் எங்கள் வீட்டில் அழகுதுரை உள்ளே நுழைந்துமேற்சொன்ன சங்கதிகளை சொன்னதாவும், உடனே அவங்களும் எம்மா இப்போதானே எங்க வீட்டுல நுழைஞ்சான் அதுக்குள்ள உங்க வீட்டிலயும் பூந்துவிட்டானா என்று விருதாம்பாள் சொன்னதாகவும், நாங்கள்சேர்ந்து தேடியபோது அவர் கிடைக்கவில்லை என்றுபோலிஸார் விசாரணையில் சொன்னேன் என்றுசொன்னால் ? சரிதான்.

**2.** மேற்சொன்ன சங்கதிகளை பற்றி முதல் விசாரணையில் சொல்லாதற்கு காரணம் நீதிமன்றத்திற்கு வந்த பதற்றத்தின் காரணமாகத்தான் அரசு தரப்பில் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றுசொன்னால் ? சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு முன்புறம் மின்விளக்கு போஸ்ட் உள்ளதா என்றால் முன்புறம் இல்லை பக்கவாட்டில் உள்ளது. மேற்சொன்ன சம்பவம் இரவு நேரத்தில் நடந்ததால் அந்த சமயத்தில் விளக்குகள் அனைத்தும் அனைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஒரு சின்ன விளக்கு மட்டும் எரிந்தது. திருடுபோனதாக சொல்லப்படும் செல்போன் பெயர் என்ன என்றால் ரெட்மி செல்போன். நீலம் நிறம் கொண்டது, மேற்சொன்ன செல்போனை எப்பொழுது வாங்கினேன் என்றால் 2024 ஆம் வருடம் மார்ச் மாதம் சென்னையில் சைதாபேட்டையில் வாங்கினேன், அதற்குண்டான ரிசிப்ட்டை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கத்தான் போனேன். அதற்குள் வீட்டு சூழ்நிலையினால் ஒப்படைக்க முடியவில்லை. நான் சொல்ல சொல்ல புகார் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார்களா என்றால் என் மனைவியை விசாரித்து புகாரை எழுதிக்கொண்டனர். என்னையும் போலிசார் விசாரித்தனர். போலிசார் பெயர் தெரியவில்லை. போலிசாரின் விசாரணையில் என் மனைவியின் சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை எப்போது போலிசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்றே காலை 9.00 மணியளவில் விசாரித்தனர். சம்பவம் எங்கே நடந்தது என்றால் வீட்டிற்கு வெளியே நடந்தது. நானும், என் மனைவியும் வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தபோது தான் செல்போனை காணவில்லை என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல நான் எதிரியை துறத்திக்கொண்டு செல்லும்போது என் மனைவி செல்போனை காணம் என்று என் பின்னாலேயே ஓடி வந்தார். செல்போனை என் மகளுக்கு வாங்கி தந்தேன். செல்போன் காணாமல் போன தினத்தன்று என்னுடைய மகளும் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோன்று ஆஜர் எதிரி என் வீட்டிற்குள் வரவில்லை என்றாலும், செல்போனை

திருடவில்லை என்றாலும் என்மனைவியின் கழுத்தில் இருந்த செயினை பறிக்க வரவில்லை என்றாலும் சரியல்ல. செல்போன் உண்மையில் திருடுபோயிருந்தால் அதற்குண்டான ஆதாரத்தை நான் போலிசாரிடமோ அல்லது நீதிமன்றத்திடமோ சமர்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. என் மனைவி அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT**

**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**CC.No.78/2024 L.W.1 P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.விமலா | Father / Husband Name | பிரகாஷ் |
| Village | ஆவினங்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 34 |
| | | Time | 12.10 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 25.07.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்.**
**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் ஆவினங்குடியில் வசித்து விவசாய வேலைசெய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 எனது வீட்டுக்காரர். எனக்கு பட்டியல் சாட்சிகள் 3 முதல் 9 வரையுள்ளவர்கள் மற்றும் ஆஜர் எதிரிதான் என்னுடைய செல்லையே எடுத்துச்சென்றவர் என்று சாட்சி ஆஜர் எதிரியை பார்த்து அடையாளம் காட்டினார். கடந்த 24 ம் வருடம், 24 ம் தேதி இரவு மே மாதம் 25 ம் தேதி இரவு 1.00 மணியிலிருந்து 1.30 மணிக்குள் என்னுடைய ஜெயினை அறுக்க போனபோது எனக்கு உணர்ச்சி வந்து ஆஜர் எதிரியின் சட்டைபையை பிடித்துவிட்டேன் அப்போது ஆஜர் எதிரி என் கையை பிடித்து உதறி தள்ளிவிட்டு உள்ளால தாழ்ப்பால்போட்டுவிட்டு வெளியில் ஓடிவிட்டார் போனபிறகுதான் வெளியேஇருந்த எனது கணவர் துரத்திக்கொண்டு சென்றபோது எந்த பக்கம் போனார் என்று தெரியவில்லை. எனது கணவர் ஓடும்போது தவறி விழுந்து காயம் காலில் அடிப்பட்டது. மறுபடியும் தேடினோம் எங்கும் கிடைக்கவில்லை. ஆஜர் எதிரிதான் என்று உறுதிசெய்துவிட்டோம் ( சாட்சி மீண்டும் எதிரியை வீட்டிலேயே அடையாளம் தெரிந்துகொண்டோம் என்று கூறுகிறார். அங்கிருந்த மாரியம்மன் கோவிலில் பட்டியல்சாட்சி 3 விருதாம்பாள் என்பவரும் தேடிக்கொண்டு வந்தார். விருதாம்பாளிடம் ஆஜர்எதிரி அழகுதுரையை தேடிக்கிட்டு வந்தீங்களா என்று கேட்டோம் கிடைக்கவில்லை என்பதால் மறுநாள் காலை ஆவினங்குடி காவல் நிலையத்தில் நான்தான் புகார்கொடுத்தேன். தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் எழுத்துமூலமான புகார் மனு, கையெழுத்துநான் கொடுத்ததுதான் அந்த புகார் மனு **அசா.ஆ.1** ஆகும். போலிஸார் என்னைவிசாரித்தார்கள். மேற்ச்சொன்ன ஆண்ராய்டு மொபைலை இன்றுவரை நான் திரும்ப பெறவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எட்டாம் வகுப்புவரை படித்துள்ளேன். அசா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் ? நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். அ.சா.ஆ.1 புகாரில் தொலைந்துபோன் செல்போன் என்னுடைய– துதான் என்பதற்கு ரிசிப்பிட், பில் போன்ற ஆதாரம் ஏதேனும் கொடுத்தேனா என்றால் ? செல்போன் தொலைந்தது என்று கொடுத்தேன். அசா.ஆ.1 புகாரில் செல்போனின் பெயரை குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் ? சரிதான் நான் பதற்றததில் சொல்லவில்லை. நான் என்னுடைய வீட்டில் இரவு 9.00, 10.00 மணிக்கு எல்லாம் தூங்கிவிடுவோன் என்றால் ?சரிதான். அவ்வாறு தூங்கும்போது உள்கதவை தாழ்பாள்போட்டுக்கொண்டுதான் தூங்குவோ என்றால் ?இல்லை திறந்துவைத்துக்கொண்டுதான் தூங்குவோம். தூங்கம் நேரத்தில் அனைத்து மின்விளக்குகளையும் அனைத்துவைத்துவிட்டு தூங்குவோமா என்றால், சிறிய மின்விளக்கை எரியவிட்டுதூங்குவோம். என் வீட்டிற்கு முன்புரம் விளக்கு வெளிச்சம் இருக்கிறதா என்றால் ? இருக்கிறது. என் வீட்டிற்கு முன்பு மின்விளக்கு வெளிச்சம் இல்லை என்றால் ? சரியல்ல. இந்த வழக்கு சம்மநதமாக போலிஸார் என்னை விசாரித்து வாக்குமூலம். பெற்றார்களா என்றால் ? என் வீட்டிற்கு வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ? மே மாதம் 25 ம் தேதி காலை 8.00 மணியிலிருந்து 8.30 மணியளவில் விசாரித்தார்கள். மேற்ச்சொன்ன போலிஸார் விசாரணையில் நானும் என்கணவரும் வீட்டிற்கு வந்து பார்க்கும்போது செல்போனை காணவில்லை என்று சொல்லுயுள்ளேன்என்றால் ? சரிதான். நான்சொல்வதுபோன்று ஆஜர் எதிரி என் வீட்டிற்குள் வந்து நுழையவும் இல்லை என்றாலும், என்னுடைய செல்போனை திருடவில்லை என்றாலும் என்னுடைய செயினை பறிக்க வரவில்லை என்றாலும் சரியல்ல. என் வீட்டிறக்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரமிருக்கும் என்றால் ? கொஞ்சம் தூரம் இருக்கும் அதாவது கால் மணி நேரத்தில் நடந்துசெல்கின்ற தூரம்தான் இருக்கும். நான்சொல்வதுபோன்று சம்பவம் நடந்திருந்தால் நான் உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் அளிக்க சென்றிருப்போம் என்றால் ? சரியல்ல. நான் நடக்காத சம்பவம் நடந்ததாக ஆஜர் எதிரி மீது ஒரு பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிகிறேன் என்றால் ? சரியல்ல. திருடுபோன செல்போனை சம்பவம் நடக்காததால்தான் போலிஸார் விசாரணையிலோ அல்லது நீதிமன்றத்தில் நான் ஒப்படைக்கவில்லை என்றாலும், செல்போன் திருடுபோகவில்லை என்றாலும் சரியல்ல. மேற்ச்சொன்ன காரணத்தினால்தான் செல்போனின் நிறத்தையோ, செல்போனின் பெயரையோ அல்லது வகையையோ, விலையையோ புகாரிலும், போலிஸார் விசாணையிலும் சொல்லவிலை என்று சொன்னால் ? சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT**

**INPRESENCE OF ACCUSED READOVER TO THE DEPONENT AND ADMITTED BY HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI